O.S.No.145/2019 தேதி – 06.02.2025

பி.வா.சா.1.– சுந்தரமூர்த்தி

வாதி தரப்பு குறுக்கு விசாரணை–

வாதிக்கு வழக்கிடை சொத்துக்களில் பங்கு உள்ளது, ஆனால் பங்கு விகிதாச்சாரம் தவறாகும். வாதிக்கு எவ்வளவு விகிதாச்சார பங்கு உண்டு என்பதை குறிப்பிட்டு பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1, 2 பட்டாவில் உள்ள சொத்துக்களையும் வழக்கிடை சொத்துகளுடன் சேர்க்க வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1, 2 பட்டாக்களில் உள்ள பெயர்கள் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியை பொறுத்தமட்டில் பி.வா.சா.ஆ.1, 2 பட்டாக்களில் அவருக்கு எந்த பங்குரிமையும் கிடையாது என்பதால் அவைகள் வழக்கிடையில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ.1, 2 பட்டாக்களில் உள்ள சொத்துக்களை வழக்கில் சேர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாதி தனக்குரிய பங்கை முறையான விகிதச்சாரப்படி தான் கோரியுள்ளார் என்றும் நான் வழக்கிற்காக தவறு என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.